මිනිස්බල හා රැකීරක්ෂා දෙපාර්තමේන්තුව
மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்
Department of Manpower & Employment

# කාර්යසාධන වාර්තාව
# செயலாற்றுகை அறிக்கை
# PERFORMANCE REPORT
# 2017

**Department of Manpower & Employment,**
9th Floor, Sethsirirpaya (Second Phase),
Battaramulla.

மனிதவலு மற்றும வேலைவாய்ப்புத் திணைக்களம

# செயலாற்றுகை அறிக்கை
# 2017

**மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம**

9ம் மாடி செத்சிரிபாய 2ம் கட்டம்

பத்தரமுல்லை.

## உள்ளடக்கம்


1. அறிமுகம்
   - 1.1 மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களம்
   - 1.2 கடமைகள் புரிகின்ற விடயப்பரப்பு
   - 1.3 தந்திரோபாய வழிமுறைப் போக்குகள்
   - 1.4 திணைக்களத்தின் போக்கு
   - 1.5 நீண்டகால இலக்குகள்
   - 1.6 திணைக்களத்தின் குறிக்கோள்கள்
   - 1.7 திணைக்களத்தின் பிரிவுகள்

2. நிறுவனக் கட்டமைப்பு
   - 2.1 அங்கீகரிக்கப்பட்டுள்ள, மற்றும் நிலையான ஆளணியின் தகவல்கள் 2017.12.31
   - 2.2 மனிதவள அபிவிருத்தி உதவியாளர்களின் தகவல்களின் சுருக்கம் - 2017

3. நிர்வாகப் பிரிவு
   - 3.1 பதவியணியின் தகவல்கள்
   - 3.2 பதவியணியின் பயிற்சி
   - 3.3 நிதி நிர்வாகம் பற்றியசுருக்கம் - 2017

4. தொழில் உருவாக்கல் மற்றும் தொழில் வழிகாட்டல் பிரிவு
   - 4.1 தொழில் உருவாக்கல் மேம்படுத்தல் நிகழ்ச்சிகளின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம்
   - 4.2 தொழில் வழிகாட்டல் பிரிவு
   - 4.3 பொதுமக்கள் வேலைவாய்ப்பு சேவை நிலையம் (PES)

5. மனிதவள திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் ஆய்வுகள் பிரிவு
   - 5.1 தொழிற்சந்தை தகவல் பகுதி
   - 5.2 தேசிய மனிதவள மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கை தயாரித்து நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல்

## 1. அறிமுகம்

### 1.1 மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களம்

2010.02.12 ஆம் திகதிய 1640/31 ஆம் இலக்க அதி விசேட வர்தமானியிலுள்ள ஒழுங்குவிதிகளின்படி மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களம் 2010 ஆம் ஆண்டில் தொழில் உறவுகள் மற்றும் மனிதவலு அமைச்சின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டது. தற்போது தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்ரகமுவ அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்குகின்ற திணைக்களத்திடம் அரச தொழில் சேவைகளை மேற்கொண்டுவரல் மற்றும் தேசிய மனிதவளங்கள் மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கைகளின் ஏற்பாடுகளை அமுல்படுத்தும் பொறுப்பும் வழங்கப்பட்டுள்ளது.

### 1.2 கடமைகள் புரிகின்ற விடயப்பரப்பு

இத் திணைக்களத்தினால் கீழ்க்கானும் வேலைகளைப் புரிவதற்கு உத்தேசிக்கப்படுகிறது.

- தேசிய மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கையினைத் தயாரித்து நடைமுறைப்படுத்துதல்.
- தொழில் உருவாக்கல் மற்றும் மேம்படுத்தல் நடவடிக்கைகள்.
- தொழில் வழிகாட்டல் தொடர்பான நடவடிக்கைகள்.
- தொழிற் சந்தை தகவல்களை சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல்.
- தொழில் இல்லம் (Jobs Net) மூலம் வழங்கப்படுகின்ற ஏனைய சேவைகள்

மற்றும் மேற்படி விடயங்களுடன் இணைந்த மற்றும் தொடர்புபட்ட ஏனைய சேவைகள்.

### 1.3 தந்திரோபாய வழிமுறைப் போக்குகள்

**<u>தொலைநோக்கு</u>**

**உலக தரத்திலான ஒரு இலங்கை தொழிற்படை**

**<u>பணிப்பிரகடனம்</u>**

**பரந்த ஆற்றல்களைக் கொண்ட சுறுசுறுப்பான மற்றும் உலகளாவிய போட்டிமிக்க தொழிற்படையொன்றை உருவாக்குதல் மற்றும் எமது மனிதவளங்களின் மொத்தப் பலத்தை இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்திக்காக ஈடுபடுத்துதல்.**

**1.4 திணைக்களத்தின் போக்கு**

2010 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இத் திணைக்களத்தால் இதுவரை தொழில் வழிகாட்டலுக்கு மற்றும் தொழில் உருவாக்கல் மேம்படுத்தல் தொடர்பாக அமுல்படுத்தப்பட்டுள்ள பல நிகழ்ச்சிகள் ஊடாக ஏராளமான நன்மை பெறுநர்களுக்குப் பயனைப் பெற்றுக்கொடுத்து இந்த நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் பொருட்டு வேலையற்ற இளைஞர் யுவதிகளுக்கு தனியார் துறையில் தொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**1.5 நீண்டகால இலக்குகள்**

உலகளாவிய ரீதியில் காணப்படும் போட்டிகரமான மற்றும் சவால்களிடையில் அந் நிலைமைகளுக்குப் பொருத்தமான விதமாக மற்றும் அதற்கு உட்படுகின்ற வகையிலான தொழிற்படையை உருவாக்குவது இத் திணைக்களத்தின் அடிப்படையான பொறுப்பாகும். இதற்கேற்ப உலகளாவிய ரீதியில் இலங்கைக்கான தொழிற்படையை உருவாக்குவதை தொலைநோக்காகக் கொண்ட இத் திணைக்களத்தின் நீண்டகால இலக்குகளைக் கீழ்க் காணும் விதமாக வகைப்படுத்த முடியும்.

1. உலகளாவிய போட்டிமிக்க, ஆற்றல்களுடைய மற்றும் பல்வகை ஆற்றல்களுடன்கூடிய இலங்கை தொழிற்படையொன்றை உருவாக்குதல்.
2. வேலையின்மையினைக் குறைக்கும் பொருட்டு பலவிதமான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல்.
3. திட்டமிடப்பட்ட, பரிபூரணமான தொழிற்சந்தைத் தகவல் வலையமைப்பொன்றை உருவாக்குதல்.

**1.6 திணைக்களத்தின் குறிக்கோள்கள்**

கீழ்காணும் குறிக்கோள்களை மேற்கொள்வதன் மூலம் மேற்படி இலக்குகளை அடையலாம்.


1. தேசிய மனிதவள கொள்கையை உருவாக்கி நிகழ்ச்சிகளை அமுலாக்குதல்.
2. ஆற்றல்கள் ஒத்திருக்காமை என்னும் அமைப்பு ரீதியான வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்த்தல்.
3. நிகழ்காலத்து தொழிற்படைக்குரிய மற்றும் எதிர்கால தொழிற் சந்தைக்குள் பிரவேசிக்கக்கூடிய சகல இலங்கையர்களும் சரியான தொழில்துறையைத் தீர்மானித்துக்கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல்.
4. மனிதவள திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் முன்னறிவித்தல்.
5. முறைசாரா துறையை அபிவிருத்தி செய்தல்.
6. தனியார் துறை வேலைவாய்ப்புகளுக்காக தொழில் நாடுவோரை ஊக்குவித்தல்.
7. சுயாதீன வேலைவாய்ப்பு சேவைகளை வழங்குதல்.
8. அவதானத்திற்கு உட்பட்டுள்ள குழுக்கள், அங்கவீனர்கள் மற்றும் குறைவாக அபிவிருத்தி அடைந்திருக்கும் பகுதிகளில் வாழ்கின்ற நபர்கள் தொடர்பாக மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புகள் சம்பந்தமான வசதிகளை வழங்குதல்.
9. உலக மற்றும் உள்நாட்டு ரீதியாக சரியான தொழிற் சந்தை தகவல்களை அனைத்து இலங்கையர்களுக்கும் பெற்றுக் கொடுத்தல்.
10. உள்நாட்டு மற்றும் உலக தொழிற் சந்தைப் போக்குகளை முன்னறிவிப்புச் செய்தல்.

இவ்வாறாக வேலையின்மையை குறைத்தல் மற்றும் சிறந்த தொழில்களை ஏற்படுத்துதல் எனும் நற்பணிகளை நிறைவேற்றும் பொருட்டு இத் திணைக்களம் தமது மனிதவளங்களைப் பயன்படுத்தி பல்வேறு நிகழ்ச்சிகளை அமுல்படுத்துகின்றது.

**1.7 திணைக்களத்தின் பிரிவுகள்**

- நிர்வாகம், திட்டமிடல் மற்றும் முன்னேற்ற கண்காணிப்புப் பிரிவு
- கணக்குப் பிரிவு
- மனிதவள திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் ஆய்வுகள் பிரிவு
    - தொழிற் சந்தை தகவல் பகுதி
    - தேசிய மனிதவளங்கள் மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கை பகுதி
- தொழில் உருவாக்கல் மேம்படுத்தல் மற்றும் தொழில் வழிகாட்டல் பிரிவு.
    - பொதுமக்கள் வேலைவாய்ப்பு சேவை
    - தொழில் உருவாக்கல் மேம்படுத்தல் பிரிவு
    - தொழில் வழிகாட்டல் பிரிவு

## 2. நிறுவனக் கட்டமைப்பு




1. கிராமிய வேலைவாய்ப்பு மற்றும் நுண் நிதி நிகழ்ச்சித்திட்டம்
2. முறைசாராத் துறையில் வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு நிகழ்ச்சி
3. தொழில்வான்மை அபிவிருத்தி நிகழ்ச்சி
4. தொழிற் குழு நிகழ்ச்சி

1. தொழில் வழிகாட்டல் தகவல் வலையமைப்பினை உருவாக்கல் / விநியோகித்தல்
2. தொழில் வழிகாட்டல் கல்வி / ஆராய்ச்சிகள்
3. தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சிகளை அமுல்படுத்துதல்

1. நிகழ்ச்சிகளைத் திட்டமிடுதல் அமுல்படுத்துதல் மற்றும் மதிப்பிடுதல்
2. கள நிகழ்ச்சிகளின் ஒருங்கிணைப்பு
3. புதிய நிகழ்ச்சிகளை இனங் காணல் / திட்டமிடுதல்.

1. பொது நிர்வாகம்
2. பணியாளர் மற்றும் நிறுவன நடவடிக்கைகள்.
3. திணைக்களத்தின் போக்குவரத்து நடவடிக்கைகள்
4. களஞ்சிய சேவை
5. 5. நலன்புரி சேவைகள்

1. வருடாந்த திட்டங்களையும் மற்றும் அறிக்கைகளையும் தயாரித்தல்
2. பணியாளர் அபிவிருத்தி
3. முன்னேற்ற மீளாய்வு நடவடிக்கைகள்
4. ஏனைய பிரிவுகளுடனான ஒருங்கிணைப்பு
5. திணைக்கள வெளியீடுகள்

1. தொழிற் சந்தை போக்குகள் பற்றிய ஆய்வு
2. தொழிற் சந்தை தகவல்களை சேகரித்தல்
3. பகுப்பாய்வு செய்தல் மற்றும் விநியோகித்தல்.

1. மனிதவள முன்னறிவிப்புச் செய்தல்
2. துறைசார் மனிதவள திட்டமிடல்
3. தொடர்புபட்ட நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பு ஊடாக திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
4. மனிதவள அபிவிருத்திக்கு உரிய கொள்கைகள் மற்றும் பிரேரணைகளை அமுல்படுத்துதல்.

1. தேசிய வேலைவாய்ப்பு சேவை வலையமைப்பு ஒன்றை அமைத்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.
2. வேலைவாய்ப்பு சேவை வழங்கும் நிறுவனங்களிடையிலான தொடர்புகள்
3. தொழிற் சந்தை

1. திணைக்களத்தின் நிதி முகாமைத்துவ நடவடிக்கைகள்

1. திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள்

## 2.1 அங்கீகரிக்கப்பட்டுள்ள, மற்றும் நிலையான ஆளணியின் தகவல்கள் 2017.12.31

| தொடர் இல. | பதவி | உரிய சேவை | அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆளணி | நிலையான ஆளணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | பணிப்பாளர் நாயகம் | இ.நி.சே. (விசேட) | 1 | 1 | 0 |
| 2 | பணிப்பாளர் (நிர்வாகம்) | இ.நி.சே. I | 1 | 1 | 0 |
| 3 | பணிப்பாளர் (தொழில் உருவாக்கல் மற்றும் தொழில் வழிகாட்டல் பிரிவு) | இ.நி.சே. I | 1 | 1 | 0 |
| 4 | பணிப்பாளர் (மனிதவள திட்டமிடல் மற்றும் ஆய்வுகள் பிரிவு) | இ.நி.சே. I | 1 | 1 | 0 |
| 5 | பிரதம கணக்காளர் | SLAcS I | 1 | 1 | 0 |
| 6 | உள்ளக கணக்காய்வாளர் | SLAcS II/III | 1 | 0 | 1 |
| 7 | கணக்காளர் | SLAcS II/III | 1 | 0 | 1 |
| 8 | உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) | இ.நி.சே. II/III | 2 | 0 | 2 |
| 9 | உதவி பணிப்பாளர் (மனிதவலு திட்டமிடல் மற்றும் ஆய்வுகள் பிரிவு) | இ.நி.சே. II/III | 2 | 1 | 1 |
| 10 | உதவி பணிப்பாளர் (தொழில் உருவாக்கல் மற்றும் தொழில் வழிகாட்டல் பிரிவு) | இ.நி.சே. II/III | 2 | 1 | 1 |
| 11 | உதவி பணிப்பாளர் (மனிதவலு திட்டமிடல் மற்றும் ஆய்வுகள் பிரிவு) | இ.தி.சே. II/III | 1 | 1 | 0 |
| 12 | உதவி பணிப்பாளர் (தொழில் உருவாக்கல் மற்றும் தொழில் வழிகாட்டல் பிரிவு) | இ.தி.சே. II/III | 1 | 1 | 0 |
| 13 | நிர்வாக உத்தியோகத்தர் | அ.மு.சே. அதி | 1 | 0 | 1 |
| 14 | மொழி பெயர்ப்பாளர் | மொழி பெயர்ப்பாளர் சேவை I/II | 1 | 0 | 1 |
| 15 | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் | இ.த.தொ.தொ.சே. 2ஆம் வகுப்பு II/III | 1 | 0 | 1 |
| 16 | புள்ளிவிபரவியல் உத்தியோகத்தர்கள் | களவேளை/அலுவலகம் சார்ந்த II/III | 1 | 0 | 1 |
| 17 | தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர்கள் | இணைந்த சேவை | 85 | 32 | 53 |
| 18 | கருத்திட்ட உத்தியோகத்தர் | இணைந்த சேவை | 3 | 3 | 0 |
| 19 | மனிதவள அபிவிருத்தி உதவியாளர் | இணைந்த சேவை | 560 | 517 | 43 |
| 20 | பொது முகாமைத்துவ உதவியாளர் | அ.மு.சே. I/II/II | 25 | 14 | 11 |
| 21 | சாரதி | சாரதி சேவை | 8 | 7 | 1 |
| 22 | அலுவலக உதவியாளர் | அ.உ.சே. II/III | 7 | 6 | 1 |
| | மொத்தம் | | 707 | 588 | 119 |

## 2.2 மனிதவள அபிவிருத்தி உதவியாளர்களின் தகவல்களின் சுருக்கம் - 2017

| மாவட்டம் | பிரதேச செயலகங்களின் எண்ணிக்கை | பிரதேச ரீதியில் இணைக்கப்பட்டுள்ள எண்ணிக்கை | மாவட்ட ரீதியில் இணைக்கப்பட்டுள்ள எண்ணிக்கை | முழு மொத்தம் | பிரதேச ரீதியிலான வெற்றிடங்களின் எண்ணிக்கை | மாவட்ட ரீதியிலான வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை | வெற்றிடங்களின் மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| அம்பாறை | 19 | 20 | 6 | 26 | 0 | 0 | 1 | 0 |
| அனுராதபுரம் | 22 | 16 | 7 | 23 | 6 | 0 | 0 | 6 |
| பதுளை | 15 | 09 | 3 | 12 | 6 | 0 | 0 | 6 |
| மட்டக்களப்பு | 14 | 14 | 8 | 22 | 0 | 0 | 0 | 0 |
| கொழும்பு | 13 | 12 | 5 | 17 | 1 | 0 | 0 | 1 |
| காலி | 19 | 22 | 12 | 34 | 0 | 0 | 3 | 0 |
| கம்பஹா | 13 | 16 | 11 | 27 | 0 | 0 | 3 | 0 |
| அம்பாந்தோட்டை | 12 | 12 | 16 | 28 | 0 | 0 | 0 | 0 |
| யாழ்ப்பாணம் | 15 | 14 | 7 | 21 | 1 | 0 | 0 | 1 |
| கண்டி | 20 | 20 | 14 | 34 | 1 | 0 | 0 | 1 |
| கேகாலை | 11 | 13 | 12 | 25 | 0 | 0 | 2 | 0 |
| களுத்துறை | 14 | 14 | 12 | 26 | 0 | 0 | 0 | 0 |
| குருநாகல் | 30 | 36 | 13 | 49 | 0 | 0 | 6 | 0 |
| மாத்தறை | 16 | 18 | 13 | 31 | 0 | 0 | 2 | 0 |
| மாத்தளை | 11 | 9 | 9 | 18 | 2 | 0 | 0 | 2 |
| மொனறாக்கலை | 11 | 11 | 6 | 17 | 0 | 0 | 0 | 0 |
| நுவரெலியா | 5 | 4 | 1 | 5 | 1 | 0 | 0 | 1 |
| புத்தளம் | 16 | 13 | 4 | 17 | 4 | 0 | 0 | 4 |
| பொலன்னறுவை | 7 | 5 | 4 | 9 | 2 | 0 | 0 | 2 |
| இரத்தினபுரி | 17 | 18 | 6 | 24 | 0 | 0 | 1 | 0 |
| திருகோணமலை | 11 | 8 | 3 | 11 | 3 | 0 | 0 | 3 |
| வவுனியா | 4 | 4 | 2 | 6 | 0 | 1 | 0 | 1 |
| மன்னார் | 5 | 3 | 2 | 5 | 2 | 0 | 0 | 2 |
| கிளிநொச்சி | 4 | 3 | 7 | 10 | 1 | 0 | 0 | 1 |
| முல்லைத்தீவு | 6 | 0 | 2 | 2 | 6 | 0 | 0 | 6 |
| மொத்தம் | 330 | 314 | 185 | 499 | 36 | 1 | 18 | 37 |

# 3. நிர்வாகப் பிரிவு

**நிர்வாகப் பிரிவின் கீழ் பின்வரும் கிளைகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.**

i. **நிறுவனப் பிரிவு**

ii. **திட்டமிடல் மற்றும் கண்காணித்தல் பிரிவு**

**திணைக்களத்தின் பணிகளை மேற்கொள்ளும்பொருட்டு உள்ளக நிர்வாக செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பதன்மூலம் உன்னதமான செயலாற்றல்களை அடைந்துகொள்வதற்காக திணைக்களத்தின் சிரேஸ்ட முகாமைத்துவத்திற்கு ஒத்துழைத்தல், நிர்வாக நடவடிக்கைகளை முன்னெடுத்து மதிப்பீடுசெய்தல், மேம்படுத்துதல் நிர்வாகப் பிரிவிற்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ள பிரதான கடமைகளாகும். அதற்கு மேலதிகமாக திணைக்களத்தின் தரத்தினைப் பேணிச்செல்வதற்காக பயனுள்ள, பௌதீக ரீதியான அபிலாஷைகளுக்கும் செயற்பாடுகளுக்கும் பொருத்தமான உயர்தரம்மிக்க பணியாட் தொகுதியினரை உருவாக்கவும், பிரிவுகளினிடையே சிறந்த, முறையான ஒருங்கிணைப்பினை ஏற்படுத்துதல், பணியாட்டொகுதியின் நலன்களை மேம்படுத்துவதற்கும் ஏனைய பிரிவுகளுக்குத் தேவையான ஒத்துழைப்புகளை வழங்குவதற்கும் நிர்வாகப் பிரிவிற்கு கடமை பொறுப்பாக்கப்பட்டுள்ளது.**

## 3.1 ஆளணி பற்றிய தகவல்கள்

### 3.1.1 பதவிநிலை உத்தியோகத்தர்களைப் புதிதாகச் சேர்த்தல்

| தொடர் இல. | பெயர் | பதவி | சேவையில் சேர்ந்த திகதி |
|---|---|---|---|
| 1 | திரு. நீல் பண்டார ஹபுகின்ன | பணிப்பாளர் நாயகம் | 2017.08.31 |
| 2 | திரு. லால் சமரசேகர | பணிப்பாளர் | 2017.09.20 |

i. **பதவிநிலை உத்தியோகத்தர்களின் இடமாற்றங்கள்**

| தொடர் இல. | பெயர் | பதவி | சேவையில் சேர்ந்த திகதி |
|---|---|---|---|
| 1 | திரு. ஏ.சாரங்கன் | பணிப்பாளர் | 2017.04.05 |
| 2 | திரு. எச்.ஜீ.ஜீ.ஜே.தர்மசேன | பணிப்பாளர் நாயகம் | 2017.06.22 |

## 3.2 பணியாளர்களுக்கான பயிற்சி

**மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் அலுவலர்களை 2017 ஆம் ஆண்டில் கீழ்வரும் பயிற்சிநெறிகளுக்கு ஈடுபடுத்தப்பட்டனர்.**

| தொடர் இல. | பாடநெறியின்/நிகழ்ச்சியின் பெயர் | நடாத்தப்பட்ட திகதி | செலவு |
|---|---|---|---|
| | தேசிய பயிற்சிநெறி | | |
| 1 | தொழில் வழிகாட்டல் தேசிய டிப்ளோமா - 2017 | 2016-2017 | 37500 |
| 3 | உளவியல்சார் பயிற்சிநெறி | 2017 | 23750 |
| | தமிழ்மொழி பயிற்சிப் பாடநெறியின் | 2017.08.18 - 2017.11.17 | 296272 |
| | வெளிநாட்டுப் பயிற்சிநெறி | | |
| 6 | மகளிர் மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி | 2016.12.05 - 2017.01.27 | 177300 |
| 7 | Training methodology for development Proffessionals - India | 2017.01.16 - 2017.02.12 | 176304 |
| 8 | Training of Trainers in Entrepreneurship and skill development - India | 2017.01.23 - 2017.03.17 | 176304 |
| 9 | MICRO CREDIT AND SUFFICIANCY ECONOMY DEVELOPMENT - Thailand | | 94314 |
| 10 | career Achievement program – south Korea | 2017.11.18 -2017.11.26 | 494164 |

## 3.3 2017 டிசம்பர் 31 வரை நிதிசார் முன்னேற்றங்கள்

| | ஒதுக்கீடு (ரூபா.000) | செலவீனம் (ரூபா.000) | மீதம் (ரூபா.000) | வீதம்(%) |
|---|---|---|---|---|
| மீண்டெழும் செலவுகள் | 356,195 | 350,057 | 6,138 | 98.28% |
| மூலதன செலவுகள் | 37,400 | 32,190 | 5,210 | 86.07% |
| மொத்தம் | 393,595 | 382,247 | 11,348 | 97.12% |


## 4. தொழில் உருவாக்கல், மேம்படுத்தர் மற்றும் தொழில் வழிகாட்டல் பிரிவு

இளைஞர் வேலைவாய்ப்புப் பிரிவு என்று 1997 ஆம் ஆண்டில் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பிரிவு 2010 ஆம் ஆண்டில் மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களம் ஸ்தாபிக்கப்படுகின்றபோது இத்திணைக்களத்தின்கீழ் உருவாக்கப்பட்டது.

தொழில் வழிகாட்டல், தொழில் உருவாக்கல் மற்றும் மேம்படுத்தல் பிரவினால் அமுல்படுத்தப்படுகின்ற பல்வேறு மற்றும் ஒன்றுடனொன்று தொடர்புபட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் ஒட்டுமொத்த இலங்கை தொழிற்படையினை முறையான தொழில்களில் ஈடுபடுத்துவதற்கும், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் அதேபோல தேசிய கொள்கைத்திட்டம் மற்றும் தனிநபர் ஆற்றல்களுக்கும் திறமைகளுக்குமேற்ப தொழில்களை விரிவுபடுத்துவதற்கும் போன்ற பரந்துபட்ட கடமைப்பொறுப்புக்களை மேற்கொள்ளப்படுகின்றது.

இந்தக் கடமைகளை ஆற்றுவதற்காக இப்பிரிவினை இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதுடன், அப்பகுதிகளை உதவிப் பணிப்பாளர் ஒருவரின் வழிகாட்டலின்கீழ் அமுல்படுத்தப்படுகின்றது. இலங்கை பூராகவும் மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் இணைக்கப்பட்டுள்ள தொழில் வழிகாட்டல் அலுவலர்கள், மனிதவள அபிவிருத்தி உதவியாளர்கள் மற்றும் அபிவிருத்தி அலுவலர்களின் மூலம் இந்த நிகழ்ச்சித்திட்டங்களைக் கீழ்மட்டத்திற்குக் கொண்டுசெல்லப்படுகின்றது.

தொழிலிலற்ற மற்றும் புதிதாக தொழிற் சந்தையில் நுழைகின்ற மற்றும் எதிர்காலத்தில் நுழையவிருக்கின்ற மக்களிடம் வேவைாய்ப்பு வசதிகளை வழங்கும் நோக்கத்துடன் 2017 ஆம் ஆண்டில் மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களம் பல்வேறு நிகழ்ச்சிகளை நடாத்தியது.



**தொழிலொன்றை நாடி இருக்கின்ற மற்றும் புதிதாக தொழிற்சந்தைக்கள் பிரவேசிக்கின்ற மற்றும் எதிர்காலத்தில் நுழைவதற்கிருக்கின்ற மக்களுக்கு வேலைவாய்ப்புத் துறையில் வசதிகளை வழங்கும் நோக்கில் மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களம் பலவிதமான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துகின்றது.**

**சாதாரண தரம், உயர்தர மாணவர்கள் மற்றும் பாடசாலை வலையமைப்பிலிருந்து வெளியேறிய மாணவர்களை மையமாகக்கொண்டு தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தப்படுகின்றது. இந்த பாடசாலை குழுவினர்க்கு மேலதிகமாக தேசிய பல்கலைக்கழக வலையமைப்பில் உள்ள மற்றும் வெளிவாரியாக பட்டத்திற்குரிய பாடநெறிகளைப் பயில்கின்ற மாணவர்களுக்கும் தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சிகளை வருடாந்தம் நடாத்தப்படுகின்றது. அதன் நோக்கமாகம் படித்த இளைஞர்களின் வேலையின்மையைக் குறைப்பதாகும்**

**அதேபோல பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு தொழில் துறைகள் பற்றிய விழிப்புணர்வும் செய்யப்படுகின்றது.**

**தொழில்நாடுவோர்களிடம் தொழிற்சந்தை இலகு தகைமைத் தேவைப்பாடுகள்மீதான ஆற்றல்களை விருத்திசெய்தல் மற்றும் தொழிற்குழு நிகழ்ச்சித்திட்டம் ஊடாக ஐந்து நாட்கள் பயிற்சியும் வழங்கிவைக்கப்படும்.**

**கிராமிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதன் மூலம் தொழில்வாய்ப்புக்களை உருவாக்குதல், தொழில் முயற்சியாளர்கள் மற்றும் சுயதொழில் புரிவோர்களை உருவாக்குவதற்காக திணைக்களமானது நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. அதன் மூலமான தனியார்துறையில் இளைஞர்களை தொழில்பெறுவதற்காக ஊக்குவிக்கப்படுகின்றது.**

**இலங்கை தொழிற்படையில் 60% ஆனோர் முறைசாராத் துறையில் உள்ளடங்குகின்றனர். திணைக்களத்தினால் அமுல்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களான மூன்று நாட்கள் முயற்சியான்மை அபிவிருத்தி பயிற்சிநெறி, சுயதொழில் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம், தொழில் முயற்சியான்மை தேவைப்பாட்டின்மீதான நிகழ்ச்சித்திட்டம் ஊடாக இந்த முறைசாராத் துறையினை அபிவிருத்திசெய்து அதனை முறைசார் அமைப்பில் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

**அதற்கு மேலதிகமாக சுயாதீன தொழில்களுக்கு ஊக்குவித்தல், பூங்காவன அலங்கார நிகழ்ச்சித்திட்டம், 100 வேலைவாய்ப்புக்கள் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம், தொழில் வழிகாட்டி போன்ற நிகழ்ச்சித்திட்டங்கள் ஹசர சஞ்சிகை வெளியிடுதல் போன்றவையும் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.**

**அவதானத்திற்குட்பட்ட குழுவினர் மற்றும் விசேட தேவையுடையவர்களுக்கான தொழில் வழிகாட்டல் மற்றும் தொழிலிலமர்த்துதல் பற்றிய பயிற்சிகளையும் நடாத்தப்படுகின்றன.**

## 4.1 தொழில் உருவாக்கல் மேம்படுத்தல் நிகழ்ச்சிகளின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம்

**2017 ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் இறுதி வரையான காலத்தினுள் களத்தில் நடாத்தப்பட்ட தொழில் உருவாக்கல், மேம்படுத்தல் நிகழ்ச்சிகளின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளது.**

| நிகழ்ச்சியின் பெயர் | மதிப்பீடு ரூ.மி | செலவீனம் ரூ.மி. | நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | | பயனாளிகள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | | | இலக்குகள் | முன்னேற்றம் | |
| தொழில் முயற்சியாண்மை அபிவிருத்திப் பயிற்சிநெறி | 0.696 | 0.755 | 24 | 45 | 1947 |
| தொழிற்குழு நிகழ்ச்சி | 0.859 | 0.838 | 24 | 24 | 776 |
| 100 வேலைவாய்ப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் | 0.630 | 0.582 | 30 | 29 | 5425 |
| தேவைப்பாட்டின் மீதான பயிற்சி நெறி | 0.480 | 0.577 | 40 | 135 | 3193 |
| தொழில்நுட்ப உதவி நிகழ்ச்சித்திட்டம் | 0.540 | 0.561 | 45 | 46 | 1549 |
| சுனிசி மெஹெவர (...............பணி) | | | | | |
| மலர் உற்பத்தி செயற்றிட்டம் | 1.3 | 1.2 | 4 | 4 | 97 |
| பதுளை மாவட்டத்தில் அங்கவீனர்கள் உள்ள குடும்பங்களுக்கான தொழில் உருவாக்கல் நிகழ்ச்சித்திட்டங்கள் | 0.165 | 0.165 | 7 | 7 | 70 |
| மொத்தம் | 4.67 | 4.678 | 174 | 290 | 13057 |

### 4.2 தொழில் வழிகாட்டல் பிரிவு

தொழில் வழிகாட்டல் ⟷ தொழில்சார் ஆலோசனை ⟷ தொழில் உளவளத்துணை

தொழில் வழிகாட்டல், நபர்களின் தொழில்சார் வாழ்க்கை மற்றும் அதன் அபிவிருத்தியினை வெற்றிக்கரமான முறையில் முகாமைத்துவம் செய்துகொள்வதற்கு உதவும். தொழில் புரிவோரின் மனப்பாங்கு வளர்ச்சி, வினையூக்கம் மற்றும் தேவையான அறிவை முன்னேற்றிடும் நோக்கத்துடன் திணைக்களத்தினால் 2017 ஆம் ஆண்டில் தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டது. 2017 ஆம் ஆண்டின் ஜனவரி முதல் டிசம்பர் இறுதி வரையான காலத்தினுள் துறையினுள் நடாத்தப்பட்ட தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சிகளின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| நிகழ்ச்சி | மதிப்பீடு ரூ.மி | செலவீனம் ரூ.மி. | நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | | பயனாளிகள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | | | இலக்குகள் | முன்னேற்றம் | |
| க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சிகள். | 1.0 | 1.226 | 2000 | 2186 | 64525 |
| க.பொ.த. உயர் தர மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சிகள். | 0.2 | 0.429 | 1450 | 1445 | 42453 |
| சுயதொழிலுக்கு ஊக்குவிக்கும் நிகழ்ச்சி | 0.926 | 0.910 | 312 | 402 | 13195 |
| தொழில் சவாலை வெற்றி கொள்ளல் நிகழ்ச்சி | 0.876 | 0.950 | 100 | 107 | 3557 |
| இளம் பட்டதாரிகளுக்கான தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சிகள் (உள்வாரி / வெளிவாரி) | 0.755 | 0.795 | 20 | 20 | 742 |
| ஆசிரியர்களுக்கான தொழில் வழிகாட்டல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் | 0.709 | 0.664 | 25 | 33 | 1239 |
| பெற்றோர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் | 0.910 | 0.862 | 306 | 396 | 19431 |
| தொழில் வழிகாட்டி நிகழ்ச்சி | 0.180 | 0.184 | 7 | 11 | 1923 |
| ஹஸர சஞ்சிகை வெளியீடு | 0.300 | 0.159 | 2 | 1 | - |
| மொத்தம் | **5.856** | **6.179** | **4222** | **4601** | **147065** |

#### 4.2.1 ஹஸர சஞ்சிகை

ஹஸர தொழில் வழிகாட்டல் மற்றும் கல்வி சஞ்சிகை வெளியீடு 2000 ஆம் ஆண்டு முதல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுவருகின்றது. அத்துடன் இந்த விடயம் தொடர்பாக சிங்கள மொழிமூலத்தில் வெளிவருகின்ற முதலாவது சஞ்சிகை இதுவாகும். இச் சஞ்சிகையானது பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், தொழிற்பயிற்சி நிறுவனங்கள், நகர சபைகள் ஊடாக நிர்வகிக்கப்படுகின்ற நூலகங்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்படுகின்றது. சஞ்சிகைக்குரிய ஆக்கங்களைத் தயாரிக்கும் பணி திணைக்களத்தில் அந்த விடயத்துடன் தொடர்புடைய நிபுணத்துவம்வாய்ந்த அலுவலர்கள் மற்றும் தொழில் வழிகாட்டல் விடயத்துடன் தொடர்புடைய நிபுணத்துவமுடையோர் மற்றும் நேரடி கலந்துரையாடல்கள் மூலமாகவும் இடம்பெற்று வருகின்றது. திணைக்களத்தின் கடமைகளுடன் தொடர்புடையதாக கீழ்வரும் விடயங்கள் தொடர்பான ஆக்கங்களை வெளியிடும்போது விசேட கவனம்செலுத்தப்படுகின்றது.

i. தொழில் வழிகாட்டல் விடயத்திற்குரிய ஆக்கங்கள்
ii. தொழில் உலகின் புதிய போக்குகள்
iii. தொழில் துறைகள் மற்றும் தொழில் தகுதிகள் பற்றிய விளக்கம்
iv. வெற்றிகரமான தொழிலாளராக அமைந்து நாட்டின் நற்பெயரைக் காத்த நபர்களுடனான நேர்முக கலந்துரையாடல்கள் மூலம் தயாரித்த ஆக்கங்கள்
v. பாடசாலை மாணவர்களுக்கு தொழில் வழிகாட்டல்களைப் பெற்றுக்கொடுக்கின்ற அவற்றுக்குரிய ஆக்கங்கள்

### 4.3 பொதுமக்கள் வேலைவாய்ப்பு சேவை நிலையங்கள்

இந்தப் பிரிவு தொழில் உருவாக்கல், மேம்படுத்தல் மற்றும் தொழில் வழிகாட்டல் பிரிவின்கீழ் இயங்குகின்றது. நாட்டின் 24 மாவட்டங்களிலும் பொதுமக்கள் வேலைவாய்ப்பு சேவை நிலையங்கள் (PES) இயங்குகின்றன. தலைமை பொதுமக்கள் வேலைவாய்ப்பு சேவை நிலையம் (National PES) பத்தரமுல்ல பிரதான அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

அரச மற்றும் தனியார் துறையின் பங்களிப்புகளுடன் அமைந்த செயற்றிட்டமொன்றாக 2003 ஆம் ஆண்டு இல.அப/03/0874/130/23 EPD/464 மற்றும் 2003.10.15 ஆம் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தின்படி வேலைவாய்ப்பு சேவைகள் வலையமைப்பு (தொழில் இல்லம்) நிருவப்பட்டது. தேசிய வேலைவாய்ப்பு கொள்கைத்திட்டத்தின் விதந்துரைகளை அமுல்படுத்தவதற்காக தொழில் உறவுகள், மனிதவலு அமைச்சின்கீழ் இந்த நிறுவனம் விரிவான முறையில் கணனி வலையமைப்பினூடாக அடையும் வகையில் சகல நிலையங்களும் ஒன்றிணைக்கப்பட்டன. ஆரம்பத்தில் வெளிநாட்டு உதவித்திட்டமாக இயங்கிய இச்செயற்றிட்டம் 2007.01.31 ஆம் திகதி வரையும் அமுல்படுத்தப்பட்டது. அதன்பிற்பாடு தொழில் உறவுகள், மனிதவலு அமைச்சினால் 2007.01.24 ஆம் திகதிய இல.2/2007 அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கேற்ப அமைச்சரவை அங்கீகாரத்தின்படி இலங்கை தொழில் இல்லம் என்னும் பெயரில் வரையறுக்கப்பட்ட கம்பனியாகப் பதிவுசெய்யப்பட்டது.

2010 ஆம் ஆண்டில் அந்த விடயப்பரப்பு தொழில் உறவுகள் மற்றும் உற்பத்தித்திறன் மேம்படுத்தல் அமைச்சின்கீழ் அமைக்கப்பட்ட மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களத்திடம் பொறுப்பாக்கப்பட்டது. உற்பத்தித்திறன் மேம்படுத்தல் அமைச்சின் கௌரவ அமைச்சரினால் தொழில் இல்லத்தை மறுசீரமைக்கும் வகையில் முன்வைக்கப்பட்ட இல.03/2011 மற்றும் 2011.02.15 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின்படி அதில் குறிப்பிடப்படுகின்ற விடயங்களுக்காக 2011.05.12 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின்படி அங்கீகாரம் கிடைக்கப்பெற்றது.

6/2011 இன் அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்குக் கிடைத்த அங்கீகாரங்களுக்கேற்ப கூட்டிணைக்கப்பட்ட பிணை நிறுவனமாக இருந்து வந்த மாவட்ட தொழில் இல்லங்கள் Jobs Net மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களத்தின்கீழ் சுவீகரிக்கப்பட்டன. அதன்பிற்பாடு திணைக்களத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட பொதுமக்கள் வேலைவாய்ப்பு சேவைகள் நிலையத்திற்கு தொழில் இல்லத்திடமிருந்த பௌதீக வளங்கள் சுவீகரிக்கப்பட்டன. அவ்வாறு ஸ்தாபிக்கப்பட்ட மாவட்ட வேலைவாய்ப்பு சேவை நிலையங்கள் இயங்குகின்ற நிலைமையில் மேற்கொண்டுசென்று திணைக்களத்தின் குறிக்கோளை அடைவதற்காக பொதுமக்கள் வேலைவாய்ப்பு சேவைகளை முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

மாவட்ட வேலைவாய்ப்பு சேவை நிலையங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற கடமைகளாவன,

- தொழில் நாடுவோரைப் பதிவுசெய்தல்.
- வெற்றிடங்கள் மற்றும் நிறுவனங்களைப் பதிவுசெய்தல்.
- நிறுவனங்களில் உள்ள வெற்றிடங்கள் பற்றி தேடிப்பார்ப்பதற்காக நடவடிக்கை மேற்கொள்ளல்.
- தொழில் நாடுவோரின் தொழில் வெற்றிடங்கள் பற்றிய ஆவணம் தயாரித்தல்.
- நேர்முகப் பரீட்சை நடாத்துதல் மற்றும் தொழில் நாடுவோரின் தகைமைகளை உறுதிசெய்தல்.
- தொழில் பொருத்தப்பாடு மற்றும் நேர்முகப் பரீட்சைக்கு அனுப்புதல்.
- தொழிலில் ஈடுபடுத்துதல் மற்றும் பின்தொடர் செயற்பாடுகள்.
- தொழில் வழிகாட்டல் சேவைகளை வழங்குதல்.
- பயிற்சிக்கான வசதிகளை வழங்குதல்.
- தொழில் நிலைமைகள் பற்றிய புள்ளிவிபரங்களை ஒன்றுதிரட்டுதல் மற்றும் வெளியிடுதல்.
- வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் பற்றிய வழிகாட்டல்களை வழங்குதல்.
- மாவட்ட தொழிற்சந்தை நிகழ்ச்சியை ஒழுங்குசெய்து நடாத்துதல்.

தொழில் நாடுவோரைப் பதிவுசெய்யும் நடவடிக்கைகள் பிரதேச மட்டத்தில் மனிதவள அபிவிருத்தி உதவியாளர்களினால் மற்றும் தொழிற்சந்தைகள், வேலைவாய்ப்பு சேவை நிலையங்கள் ஊடாக வழங்கப்படுகின்ற தகவல்கள் மூலம் போன்ற பல்வேறு வழிமுறைகளில் இடம்பெறும்.

தொழில் நாடுவோரின் எதிர்பார்ப்புகளை அடிப்படையாகக்கொண்டு தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சிகள் ஒழுங்குசெய்யப்படுகின்றன.

| | நிகழ்ச்சி / செயற்பாடு | 2017 ஆம் ஆண்டுக்கான இலக்குகள் | | 2017/01/01 முதல் 2017/12/31 வரை முன்னேற்றங்கள் | |
|---|---|---|---|---|---|
| | | பௌதீக | நிதி (ரூ.மி) | பௌதீக | நிதி (ரூ.மி) |
| 01 | பொதுமக்கள் வேலைவாய்ப்பு சேவை நிலையங்களை மேம்படுத்துதல் மற்றும் ஆரம்பித்தல் | 6 | 2.980 | 6 | 2.987 |
| 02 | பொதுமக்கள் வேலைவாய்ப்பு சேவை நிலையங்களை நடாத்துதல் | 24 | 2.000 | 24 | 1.755 |
| | தொழில்நாடுவோரைப் பதிவுசெய்தல் | - | - | 31,249 | - |
| | தொழில் வெற்றிடங்களைப் பதிவுசெய்தல் | 25,514 | - | 21,765 | - |
| | தொழில் பொருத்தப்பாடு | - | - | 25,457 | - |
| | தொழிலிலமர்த்துதல் | 7,600 | - | 4,322 | - |
| 03 | மாவட்ட தொழிற்சந்தை நடாத்துதல் | 12 | 1.863 | 11 | 1.732 |
| 04 | வேலைவாய்ப்பு சேவைகளை வழங்குவதற்காக தொழிற்சந்தை தகவல் வலையமைப்பை நிறுவுதல் - இணையவழி தொடர்பொன்று | 100% | 3.000 | 20% | 2.001 |

**தொழில்களிலமர்த்துதல் 2017.01.01 முதல் 2017.12.31 வரையான முன்னேற்றங்கள்**

| மாவட்டம் | நேரடி தொழில்களிலமர்த்துதல் | | சுயதொழிலாளர்கள் / தொழில் முயற்சியாளர்களை உருவாக்குதல் |
|---|---|---|---|
| | பொதுமக்கள் வேலைவாய்ப்பு சேவை நிலையங்கள் ஊடாக | பிரதேச செயலகங்கள் மட்டத்தில் | |
| கண்டி | 261 | 506 | 93 |
| கேகாலை | 158 | 400 | - |
| கொழும்பு | 368 | 85 | - |
| இரத்தினபுரி | 190 | 439 | 177 |
| பதுளை | 150 | 245 | 50 |
| குருநாகல் | 585 | 733 | 267 |
| களுத்துறை | 259 | 351 | 159 |
| காலி | 160 | 299 | 83 |
| மட்டக்களப்பு | 131 | 351 | 174 |
| கம்பஹா | 305 | 398 | 46 |
| மாத்தறை | 291 | 413 | 80 |
| புத்தளம் | 87 | 341 | 126 |
| அம்பாந்தோட்டை | 303 | 376 | 24 |
| அனுராதபுரம் | 143 | 99 | 54 |
| யாழ்ப்பாணம் | 284 | 310 | 172 |
| கிளிநொச்சி | 15 | 39 | 50 |
| திருகோணமலை | 54 | 24 | 57 |
| நுவரெலியா | - | 58 | - |
| மாத்தளை | 124 | 467 | 29 |
| அம்பாறை | 65 | 361 | 208 |
| பொலன்னறுவை | 116 | 2 | 54 |
| மொனறாகலை | 137 | 142 | - |
| வவுனியா | 65 | 52 | 81 |
| மன்னார் | 50 | 48 | 51 |
| முல்லைத்தீவு | 21 | - | 10 |
| மொத்தம் | 4322 | 6539 | 2045 |

**மாவட்ட தொழிற்சந்தை நிகழ்ச்சிகளின் முன்னேற்றங்கள்**

| மாவட்டம் | இடம் | நடைபெற்ற திகதி | தொழில் நாடுவோர் எண்ணிக்கை | பங்குபற்றிய நிறுவனங்களின் எண்ணிக்கை | பயிற்சி நிறுவனங்களின் எண்ணிக்கை | தொழில் பொருத்தப்பாடுகள் |
|---|---|---|---|---|---|---|
| காலி | லபுதுவ | 2017/01/14 | 918 | 32 | 05 | 421 |
| பதுளை | ஹாலிஎல | 2017/02/18 | 854 | 30 | 03 | 650 |
| பதுளை | ஊவபரணகம | 2017/02/19 | 1251 | 28 | 02 | 820 |
| கம்பஹா | மினுவாங்கொடை | 2017/03/25 | 674 | 38 | 07 | 1504 |
| திருகோணமலை | மசீர் விளையாட்டு மைதானம் | 2017/03/30 | 710 | 38 | 05 | 700 |
| நுவரெலியா | நகர மண்டபம் | 2017/07/01 | 559 | 45 | 03 | 391 |
| மொனராகலை | மாவட்ட செயலகம் | 2017/08/12 | 820 | 30 | 03 | 353 |
| மாத்தறை | மாவட்ட செயலகம் | 2017/08/19 | 768 | 25 | 07 | 850 |
| அம்பாந்தோட்டை | தங்காலை | 2017/09/02 | 920 | 26 | 07 | 685 |
| புத்தளம் | சிலாபம் | 2017/09/16 | 729 | 38 | 04 | 739 |
| களுத்துறை | பாணந்துறை பாலிகா வித்தியாலயம் | 2017/10/21 | 510 | 42 | 7 | 758 |
| மொத்தம் | | | 8713 | 372 | 53 | 7871 |

**5. மனிதவள திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் ஆய்வுகள் பிரிவு**

**தொழிற்சந்தை தகவல் வலையமைப்பனது பல்வேறு கொள்கை வகுப்பாளர்களுக்கும் கல்வித் துறையிலுள்ள கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள், பயிற்சி மற்றும் திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குபவர்களுக்கும் தேவையாகும்.**

**தொழிற்சந்தை தகவல்களை ஒன்றுதிரட்டுகின்றபோது வேகமாக மாற்றமடைகின்ற திறன்வாய்ந்த மனிதவளத்திற்கு தொழிற்சந்தையில் உள்ள கேள்விகளை கண்கானித்தலும் மதிப்பிடுதலும் அத்தியாவசியமாகும். மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களம் தொழிற்சந்தை தகவல் ஒன்றுதிரட்டுதல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல்களை மேற்கொண்டுவருகின்றது.**

**அதேபோல இலங்கையில் நிகழ்கால மற்றும் அபிவிருத்தி தேவைப்பாடுகளுக்குப் பொருத்தமான தொழிற்சந்தை ஆய்வுகள் மற்றும் கணக்கெடுப்புகளை நடாத்துதல், தொழிலாளர் கேள்வி மற்றும் நிரம்பல் பற்றிய கற்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் அந்தத் தகவல்களைப் பகிர்ந்தளித்தல் போன்றவை தொழிற்சந்தை பகுதியினால் மேற்கொள்ளப்படுகின்றது. தொழிற்சந்தை தகவல் சஞ்சிகை மற்றும் பாடசாலை மைய தரவுகள் கையேடு இதன்மூலம் வெளியிடப்படுகின்றது.**

## 5.1 தொழிற்சந்தை தகவல் பகுதி

| தொ. இல. | உத்தேச நிகழ்சித்திட்டங்கள் | நடாத்திய நிகழ்ச்சிகள் | முன்னேற்றம் | நிதி சுருக்கம் (ரூ.) |
|---|---|---|---|---|
| 01 | நிதித் துறையில் தொழில் பேரேடு | 1200 புத்தகங்கள் அச்சிட்டு முடிக்கப்பட்டுள்ளது. | 100% | 132,808 |
| 02 | மின்சாரம் மற்றும் நீர் வழங்கல் துறையில் தொழில் பேரேடு | இறுதி அறிக்கை தயாரிக்கப்படுகின்றது. பிற்பாடு இணையத்தளத்தில் வெளியிடப்படும். | 70% | 8,008 |
| 03 | மீன்பிடி கடற்தொழில் துறையில் தொழில் பேரேடு | 1200 புத்தகங்கள் அச்சிட்டு முடிக்கப்பட்டுள்ளது. | 100% | 293,908 |
| 04 | அரசாங்க சேவையில் தொழில் பேரேடு | 1200 புத்தகங்கள் அச்சிட்டு முடிக்கப்பட்டுள்ளது. | 100% | 294,000 |
| 05 | தொழிற்சந்தை தகவல் எதிர்வுகூறல் | அறிக்கை தயாரித்து திணைக்களத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டது. | 100% | - |
| 06 | சுயதொழில் ஆற்றல்கள் பற்றிய ஆய்வு | ஆரம்ப அறிக்கை தயாரித்து சமுர்த்தி திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. அனுமதி வழங்கப்பட்ட பிற்பாடு திணைக்களத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்படும். | 90% | 6,015 |
| 07 | சமூக, பொருளாதார தகவல் கையேடு | சிங்கள மொழியில் 4711 புத்தகங்களும், தமிழ் மொழியில் 1950 புத்தகங்களும் அச்சிட்டு முடிக்கப்பட்டுள்ளது. | 100% | 673,745 |

**2017 ஆம் ஆண்டில் தொழிற்சந்தை தகவல் பகுதியில் உத்தேசிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்களின் விபரங்கள்**

இலங்கையில் இளைஞர் சமூகத்திடம் வேலையின்மை ஒரு பாரிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது. பல இளைஞர்கள் உயர் கல்வி கற்றிருக்கின்றபோதிலும் வருடாந்தம் தொழிற்சந்தைக்குள் நுழைகின்றவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாகும். தொழிற்சந்தையில் உள்ள தகவல்களைப் பெறுவதில் இருக்கின்ற கஷ்டங்கள்தான் இலங்கையின் இளைஞர் வேலையின்மைக்கான பிரதான காரணமாக அமைந்துள்ளது. அந்த தகவல் பெறுவதிலுள்ள முரண்பாடுகளுக்குத் தீர்வாக இலங்கையில் பல்வேறு துறைகளிலுள்ள வேலைவாய்ப்புக்களைப் பற்றி ஆய்வுசெய்து அவை தொடர்பான தகவல்களை தொழில்நாடுவோர்க்கு வழங்கிவைப்பதற்காக பின்வருமாறு காட்டப்படுகின்ற தொழில் பேரேடுகளுக்கான ஆய்வு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

**01. நிதித் துறையில் தொழில் பேரேடு**

இந்த ஆய்வின் பிரதான நோக்கம் நிதித் துறையில் உள்ள வேலைவாய்ப்புக்கள் எவை என்பதைப்பற்றி இனங்காண்பதற்கு இயலுமாதல், தொழில்களுக்குப் பொருத்தமான தகைமைகள் மற்றும் ஆற்றல்களை இனங்காண இயலுமாதல், நிதித் துறையில் உள்ள தொழில்களில் பதவியுயர்வு முறைமைகளை இனங்கானுதல் மற்றும் தற்போதுள்ள தொழில்களில் காணப்படும் நன்மைகளை இனங்காண்பதற்கும் (சம்பளம் / ஏனைய / தொழில் வழிமுறை) இயலுமாதல்.

வங்கி மற்றும் வங்கியல்லாத நிதி நிறுவனங்களை அடிப்படையாகக்கொண்டு எமது பகுதியினால் தயாரிக்கப்பட்டுள்ள வினாக்கொத்தொன்றின் மூலமாக இந்த ஆய்வை மேற்கொள்ளப்பட்டது. தெரிவுசெய்த நிதி நிறுவனங்களாவன.

- DFCC Bank PLC
- Bank of Ceylon
- Pan Asia Bank
- Cargills Bank,
- Deutsche Bank
- Vallibel Finance PLC
- Siyapatha Finance PLC
- Mercantile Investments & Finance PLC
- People's Leasing and Finance PLC.

அதற்கேற்ப 38 தொழில்கள் இனங்காணப்பட்டது.

**02. மின்சாரம் மற்றும் நீர் வழங்கல் துறையில் தொழில் பேரேடு**

இந்த ஆய்வின் பிரதான நோக்கம் மின்சாரம் மற்றும் நீர்வழங்கல் துறையில் உள்ள தொழில்வாய்ப்புக்கள் எவை என்று இனங்காண முடிந்தமையாகும். தொழில்லுக்குத் தேவையான தகைமைகள் மற்றும் ஆற்றல்களை இனங்காண்பதற்கும் இயலுமாதல், மின்சாரம் மற்றும் நீர்வழங்கல் துறையில் உள்ள தொழில்களில் பதவியுயர்ந்து செல்லும் முறைமை மற்றும் நன்மைகளைப் பற்றி இனங்காண (சம்பளம் / ஏனைய / தொழில் வழிமுறை) இயலுமாதல்.

மின்சாரம் மற்றும் மீள்புதுப்பித்தல் சக்திவலு அமைச்சு மற்றும் அந்த அமைச்சின்கீழ் உள்ள அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சு மற்றும் அதன்கீழ் உள்ள சபைகளினை பிரதானமாகக்கொண்டு எமது பகுதியினால் தயாரிக்கப்பட்டுள்ள வினாக்கொத்தின் மூலம் இந்த ஆய்வினை மேற்கொள்ளப்பட்டது.

**03. மீன்பிடி கடற்தொழில் துறையில் தொழில் பேரேடு**

இலங்கைப் பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்புச் செய்கின்ற இந்து சமுத்திரம் இலங்கைக்கான ஓர் வரப்பிரசாதமாகும் என்று கருதப்படுகின்றது. இயற்கையாகவே நாட்டை கடலால் சூழப்பட்டுள்ள பாரிய சமுத்திரம், நாட்டின் உள்ளே இருக்கின்ற இயற்கையான நதிகள், ஆறுகள் மற்றும் குளங்கள், முதியோரினால் அமைத்துக்கொடுக்கப்பட்ட வாவிகள் போன்றவை மீன்பிடி கைத்தொழில்கள் போன்ற பொருளாதாரத்தில் தன்னிறைவடைய அவசியான முன்னெடுப்புகளுக்குத் தேவையான அடித்தளமிடப்பட்டுள்ளதாகக் கருதப்படுகின்றது.

அதன்படி மீன்பிடிக் கைத்தொழிலுக்காக அரச நேரடி தலையீடுகள் வரை உள்ளதால் மீன்பிடித் துறையில் கொள்கை நடைமுறைகளை அமுல்படுத்தவதற்காக கடற்றொழில் அமைச்சின்கீழ் 06 நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அரச கொள்கை நடைமுறைகளின்படி புதிய செயற்றிட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக கடற்றொழில் அமைச்சு பாரிய அபிவிருத்தியை அடைந்துள்ளதால், அதன்மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பினையும் வழங்க முடிந்துள்ளது. ஏனைய பொருளாதார வலயங்களில் 517000 ச.கி.மீ பகுதி உவர்நீர் மீன்பிடித் துறையையும், 489,000 ஹெக்டேயர்கள் நன்நீர் மீன்பிடித் துறையையும் முகாமைசெய்கின்ற பொறுப்பு கடற்றொழில் மற்றும் நீரியல்வளங்கள் அபிவிருத்தி அமைச்சுக்கு உண்டு.

அவ்வாறானதொரு பின்னணியில் மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களத்தின்கீழ் இயங்குகின்ற மனிதவள திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் ஆய்வுகள் பகுதியாகிய நாம் இலங்கையில் கடற்றொழில் துறையில் உள்ள வேலைவாய்ப்புகளை இனங்கண்டு மற்றும் ஆய்வுசெய்வதன் மூலம் திரட்டப்பட்ட தகவல்களை உள்ளடக்கியதாக தொழில் பேரேட்டைத் தயாரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

அதனையிட்டு இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்காக அதியுயர் பங்களிப்புகளை மேற்கொள்கின்ற சாத்தியவளங்கள் உடைய அதேபோல புதிய தொழில்வாய்ப்புகளை உருவாக்குகின்ற உயர் போக்குகளுடையவையாக இனங்காணப்பட்டுள்ள கடற்றொழில் துறையில் தொழில் பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கடற்றொழில் துறையில் அதற்காக 10 நிறுவனங்கள் ஈடுபடுத்தப்பட்டதுடன் முறைசார் வினாக்கொத்தொன்றின் மூலம் தகவல்கள் திரட்டப்பட்டது. இலங்கை கடற்றொழில் துறையில் அதிகேள்வியுடைய தொழில்வாய்ப்புக்கள் பற்றிய அந்தந்த தொழில்களுக்குத் தேவையான கல்வி, தொழிற்தகைமைகள் மற்றும் ஆற்றல்கள் பற்றியும்,

அந்தத் தொழில்களில் உள்ள வாய்ப்புகளுக்கான சேவை வழங்கல், சம்பளம் உட்பட நன்மைகள் மற்றும் தொழில் விருத்திக்கான போக்குகள் பற்றியும் ஆய்வுசெய்தல் அங்கு பிரதான நோக்கமாகக்கொள்ளப்பட்டது. அதற்காகத் தெரிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள் பின்வருமாறு.

- கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி திணைக்களம் (DFAR)
- தேசிய நீரியல் வளங்கள் ஆய்வு மற்றும் அபிவிருத்தி முகவரகம் (NARA)
- தேசிய நீர்வாழ் உயிரினங்கள் அபிவிருத்தி அதிகாரசபை (NAQDA)
- இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் (CFC)
- இலங்கை துறைமுக மீன்பிடிக் கூட்டுத்தாபனம் ලංකා වරාය ධීවර නීතිගත සංස්ථාව (CFHC)
- வரையறுக்கப்பட்ட சீனோர் மன்றம் (Cey - Nor)
- ஸ்கைவே சீ புட்ஸ் ஸ்பெஷலிஸ்ட் தனியார் கம்பனி
- ஜே.பீ.ப்ரெஷ் ப்ரொடக்ட்ஸ்
- ஜே.சீ.புட்ஸ் ப்ரொசெசின் தனியார் கம்பனி
- ட்ரொபிக் ப்ரொஷன் புட்ஸ் லிமிட்டட்

## 04. அரசாங்க சேவையில் தொழில் பேரேடு

மொத்த தொழிற்படையில் அரச துறையில் வேலைகொள்வோர் 15.1% ஆகும். அத்துடன் படித்த இளைஞர்களிடையே அரச தொழிலுக்கான போக்கு அதிகம். அரச துறைக்கள் நுழைகின்றபோது தேவைப்படுகின்ற அடிப்படைக் கல்வி மற்றும் தொழிற் தகைமைகள் பற்றிய விழிப்புணர்வு வழங்கப்படுவதால் தேவையற்ற முறையில் அரசதுறையில் தொழில்களுக்கான நீண்ட வரிசையில் இருப்பதைத் தடுப்பதற்காக அரசாங்க சேவையில் தொழில் பேரேடு பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வின் பிரதான நோக்கம் அரச துறையிலுள்ள தொழில் வகைகளை இனங்காண்பதும், அரச துறையில் ஒவ்வொரு தொழில்களுக்கும் தேவையான தகைமைகள், ஆற்றல்கள் மற்றும் தொழில்களின் போக்கினையும் இனங்காண்பதுமாகும்.

இந்த ஆய்விற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள திணைக்களங்கள், அமைச்சுக்களைத் தெரிவுசெய்ததுடன், தயாரிக்கப்பட்ட வினாக்கொத்தின் மூலம் தரவுகள் திரட்டப்பட்டன.

- அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு
- அரசாங்க சேவை ஆணைக்குழு
- விவசாய அமைச்சு
- சமூகசேவைகள் திணைக்களம்
- இலங்கை நிளஅளவைகள் திணைக்களம்
- வனவள பாதுகாப்பு திணைக்களம்

அவற்றின்கீழ் 73 பதவிகள் உள்ளதுடன் அரச துறையில் நாடளாவிய சேவைகள், இணைந்த சேவைகள் மற்றும் திணைக்களப் பதவிகளும் உள்ளடங்கியுள்ளன.

## 05. தொழிற்சந்தை தகவல் எதிர்வுகூறல்

நாடொன்றின் சமூக, பொருளாதார அபிவிருத்திக்கு மிக முக்கியம்வாய்ந்த பிரிவாக தொழிற்சந்தை தகவல் பகுதி இயங்கிவருகின்றது. விவசாயம், தொழில்நுட்பம் மற்றும் சேவைகள் துறை உற்பத்தி நடவடிக்கைகளுக்காக மனிதவலு அத்தியாவசியமாகும். அதேபோல ஊழியத்திற்காகவேண்டி கிடைக்கின்ற பலன்கள் (அதாவது சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் இலாபம்) குடும்ப வருமான மீட்பித்தல் வழிவகைகளள் போன்றவை மிகமுக்கியம்வாய்ந்தவையாகும். ஆதலால் தொழிற்சந்தை தகவல்கள் நாட்டின் பொருளாதார சுபீட்சத்திற்காகவும் எதிர்கால திட்டமிடல்களுக்காகவும் மிகமுக்கியம்வாய்ந்த பகுதியாக அமைந்துள்ளது.

அதேபோல தொழிற்சந்தை தகவல்களை ஒன்றுதிரட்டி பகுப்பாய்வுசெய்வதன் மூலம் தேசிய மற்றும் பிராந்திய ரீதியில் மனிதவள பயன்பாட்டிற்கான கொள்கைத் தீர்மானங்களுக்கு உதவுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையில் தொழிலாளர் கேள்வி தொடர்பான ஆய்வொன்று 2017 ஆம் ஆண்டில் தொகைமதிப்பு, புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் நடாத்துவதற்கு ஒழுங்குசெய்யப்பட்டது, எனினும் அந்த ஆய்வின் தகவல் அறிக்கையை இதுவரை வெளியிடப்படவில்லை. அதேபோல அதற்கு முன்னைய வருடங்களில் பின்பற்றிய விதத்தில் அவ்வாறான தொழிலாளர் கேள்வி பற்றிய அண்மைக்கால, நம்பகமான தகவல்கள் மூன்றாம்நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள வருடாந்த வேலைவாய்ப்பு பகுப்பாய்வு தகவல்களை இந்த அறிக்கைக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது

அங்கே விசேடமாக தொழில் நாடுகின்றவர்கள் எதிர்பார்க்கின்ற தொழிற்சந்தை தகவல்களிடையே உயர் கேள்வியுடைய தொழிற்துறைகள், வேலைவாய்ப்புக்களுக்கு அத்தியாவசியமான கல்வி மற்றும் தொழிற்தகைமைகள் எவை எனக் கவனத்திற்கொள்ளப்படும். அதேபோல தொழில்வாய்ப்புகளுக்குத் தேவையான அனுபவங்கள் பற்றிய தகவல்கள்மீதும் முன்னுரிமையளிக்கப்படும். அவ்வாறான தகவல்களை அடிப்படையாகக்கொண்டு தொழிலாளர் கேள்விக்குப் பொருத்தமானவகையில் தங்களுடைய தகுதிகளை அடைந்துகொள்வதன் மூலம் மிகவும் இலகுவாக தொழில் எதிர்பார்ப்புகளினை அடையும்வகையில் தொழில்களில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பங்கள் கிடைக்கும் வாய்ப்பு உண்டு.

இந்த அறிக்கையில் மூன்றாம்நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள ஏழு ஆண்டுகள் (2008 - 2014) தொழிற்சந்தை தகவல் பகுப்பாய்வு தரவுகள் உள்ளடங்கிய (SPSS நுட்பமுறை) முறைசார் மற்றும் முறைசாரா தொழிற்துறைகளில் உள்ள பிரதான தொழிற் பிரிவுகள், கல்வித்கைமைகள், ஆண்/பெண் பால்நிலை அடிப்படையில் தொழிலாளர் கேள்வி, அனுபவங்களுக்கேற்ப கேள்வி பரம்பல் விதம் பற்றியும் சுருக்கமாக விபரிக்கப்பட்டுள்ளது.

**06. சுயதொழில் ஆற்றல்கள் பற்றிய ஆய்வு**

மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் மனிதவள திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் ஆய்வுகள் பகுதியினால் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஒத்துழைப்புகளுடன் இந்த சுயதொழில் ஆற்றல்கள் பற்றிய ஆய்வினை மேற்கொள்ளப்பட்டதுடன், அதன்மூலமாக அம்பாந்தோட்டை, புத்தளம், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களில் 2016 ஆம் ஆண்டில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்ட வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் சூழல் நட்புறவான மாதிரிக் கிராமம் போன்ற சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டங்களின் பயனாளிகளுக்கு உரிய நிகழ்ச்சித்திட்டங்களினூடாக நேரடி பயன்களாக சுயதொழில்வாய்ப்புக்களை உருவாக்கியுள்ளமை பற்றி ஆய்வுசெய்யப்பட்டது.

சமுர்த்தி தணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் உட்பட சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர்களின் அனுசரணையுடன் திட்டமிடப்பட்டிருந்த இந்த ஆய்வில், தரவுகளை ஒன்றுதிரட்டுவதற்காக சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களின் உயிர்ப்புடன்கூடிய பங்களிப்புகள் கிடைத்தமையால், ஆய்விற்காகத் தெரிவுசெய்யப்பட்ட மாதிரிக்குரிய பயனாளிகளினால் உயர்ந்தபட்ச வரவேற்புக் கிடைத்துள்ளது.

அம்பாந்தோட்டை, புத்தளம், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களில் உள்ள சகல பிரதேச செயலக பிரிவுகள் மட்டத்திலும் மானிய உதவிபெறுபவர்களிடையே எதேச்சையான மாதிரி தெரிவு முறைக்கேற்ப தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளை இந்த ஆய்வுக்காக ஈடுபடுத்தப்பட்டனர். முறையான வினாக்கொத்தொன்றின் மூலம் உரிய சமுர்த்தி பயனாளிகளிடமிருந்து தகவல்கள் ஒன்றுதிரட்டப்பட்டன. மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் மனிதவள அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களின் ஒத்துழைப்புகள் கிடைத்தமையால் தகவல் திரட்டுவது இலகுவான காரியமாக அமைந்தது.

## 07. சமூக, பொருளாதார தகவல் கையேடு

நிகழ்கால இலங்கையில் தற்போதைய போட்டிமிக்க கல்வி முறைமை காரணமாக உலகளாவிய ரீதியில் பரந்துபட்டதாக அறிவு தேடிச்செல்லும்போக்கு திறந்துவிடப்பட்டுள்ளமையால் சிறுவயதிலிருந்தே பிள்ளைகளை அறிவுதிறன்கூடிய பரிபூரணத்துவம்மிக்க நபராக ஆக்குவது எம் அனைவரதும் பொறுப்பாகும். பாடசாலைக் கல்வியிலுள்ள தடைகளை வெற்றிகொள்ளவும், பிற்பாடு உயர்கல்விக்குச் செல்வதற்கான முயற்சிகளை மேற்கொள்கின்ற பிள்ளைகளுக்கு கைகொடுப்பதற்காகவும் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் சமூக, பொருளாதார போக்குகள் விசேடமாக தொழிற்சந்தை பற்றிய அடிப்படையான தெளிவினைப் பெற்றுக்கொடுப்பதற்காக, மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் மனிதவள திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் ஆய்வுகள் பகுதியினால் சமூக, பொருளாதார தகவல் கையேடு வெளியிட்டு வைக்கப்படுகின்றது.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் அவற்றின் மூலமாக வெளியிட்டுவைக்கப்படுகின்ற சமூக, பொருளாதார பெறுமதிகளுடன்கூடிய தரவுகளை ஒன்றுதிரட்டி கையேடாக வெளிக்கொண்டுவருவதும், தங்களுக்கு மூலாதார பரிசீலனை ஏதுமின்றி தரவுகளைப் பெற்றுக்கொள்ளும் வசதியை செய்துகொடுத்தலும் எமது பிரதான நோக்கமாகும்.

நாடொன்றின் சமூக, பொருளாதார, அரசியல் மட்டத்தில் தீர்மானங்களை மேற்கொள்வதற்காக மிகவும் முக்கியமான குறிகாட்டிகளாக அமைபவை அவைகளையண்டி இருக்கின்ற தரவுகளும் குறிகாட்டிகளுமாகும். நாட்டின் அபிவிருத்தியை நோக்கிப் பயணிப்பதெப்படி? என்பதைப் பற்றிய விளக்கமளிக்கின்ற இந்த தகவல் கையேட்டின் மூலமாக தெளிவினைப் பெற்று பரிசீலனை செய்வோர் அவற்றை அடைந்துகொள்ளலாம்.

உள்நாட்டு, வெளிநாட்டு மூலாதாரங்களிலிருந்து பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட இந்தக் கையேட்டின் மூலம் இலங்கை சமூக, பொருளாதார அபிவிருத்தியை நோக்கிச் செல்வதற்குத் தேவையான சமூக, பொருளாதார நிலைமைகள் யாவை என்பது பற்றி பகுப்பாய்வு செய்வதற்கு இயலுமாகலாம்.

அதேபோல இந்த தகவல் கையேடு உயர் தரம் கற்கின்ற மாணவர்களின் தமது பாடத்துறைகள் உட்பட அவர்களின் பொதுஅறிவு, விடய அறிவு விருத்திக்கும் பயனுள்ளதாக அமையலாம்.

## 5.2 தேசிய மனிதவளங்கள் மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கையைத் தயாரித்து நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல்.

**2017 ஆம் ஆண்டில் தேசிய மனிதவளங்கள் மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கையுடன் தொடர்புடையதாக மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றங்கள்.**

- தேசிய மனிதவளங்கள் மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கை தற்போதைய அரசின் இடைக்கால அபிவிருத்தி கொள்கை சட்டகத்தின்படி மீண்டும் திருத்தியமைக்கப்பட்டது.
- அந்தக் கொள்கையை அமுல்படுத்துவதற்குரியதாக நேரடியான விடயங்கள் பற்றிய இனங்காணப்பட்டுள்ள 25 அமைச்சுக்களினால் அக்கொள்கைத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான நடவடிக்கை வேலைத்திட்டம் 2017-2020 காலப்பகுதியில் உரியவாறு திருத்தியமைப்பதற்கான முன்யோசனைகள் கோரப்பட்டன.
- 17 அமைச்சுக்களினால் பூரணப்படுத்தப்பட்ட நடவடிக்கை வேலைத்திட்டம் வழங்கிவைக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய 08 அமைச்சுக்களினால் கொடுக்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்களை நாள்வலுப்படுத்துவதற்குத் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.
- கொள்கைத்திட்டத்துடன் தொடர்புடைய அமைச்சுக்களினால் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் பற்றிய முன்னேற்றங்களை மீளாய்வுசெய்யும் நடவடிக்கைகளும் மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தேசிய மனிதவளங்கள் மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கை வழிப்படுத்தல் பகுதியினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திணைக்களத்தினால் அமுல்படுத்தப்படுகின்ற விசேட நிகழ்ச்சிகள்**

1. தாவர ஒட்டு முறைமை மூலமாக நிகழ்ச்சித்திட்டன்கீழ் அமுல்படுத்தப்படுகின்ற மலர் உற்பத்தி தொழில் முயற்சியான்மை அபிவிருத்தி முன்னோடி வேலைத்திட்டம் - சுபீட்சம்மிக்க பணிக்கொடை நிகழ்ச்சித்திட்டம் இந்த செயற்றிட்டத்தின்கீழ் வேலையற்ற பட்டதாரிகளை மலர் உற்பத்தி துறையில் உரிய முயற்சியாளர்களை அபிவிருத்தி செய்தல், தாவர ஒட்டு முறைமைகளின்படி உற்பத்திசெய்யப்படுகின்ற பயிர்வளர்ப்பு நாற்றுமேடைகள் உரிமையாளர்களை தொழில்முயற்சியாளர்களாக உருவாக்குதல் மற்றும் அபிவிருத்திசெய்தல், தாவர ஒட்டு முறைமை மூலமாக பயன்படுத்திய அடிப்படை பயிர்வளர்ப்புகளை வியாபார மட்டத்திலான விஞ்ஞான ஆய்வுகூடமாக ஸ்தாபித்தல் ஊடாக நேரடியாகவும் மறைமுகமாகவும் தொழில்வாய்ப்புக்களை உருவாக்குவதனை எதிர்பார்க்கப்படுகின்றது.

   இந்தப் பயிற்சிநெறி பட்டதாரிகள் மற்றும் இளம் பட்டதாரிகளுக்கானதாகும். விசேடமாக ஆகஸ்ட் மாதம் 4-9 வரையுமான காலத்தில் மற்றும் ஏனைய காலத்தில் விண்ணப்பித்தவர்களுக்காக 03 நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.
2. பதுளை மாவட்டத்தில் உள்ள அங்கவீனர்கள் உள்ள குடும்பங்களின் பெண்கள் மற்றும் அந்த மாவட்டத்தில் உள்ள தனியாள் பெண் குடும்பத் தலைவர் உள்ள குடும்பங்களது பெண்களை பொருளாதார மற்றும் சமூக ரீதியில் வலுவூட்டுதல் மற்றும் அவர்களை பொருளாதார பகுதியினராக உருவாக்குவதற்கான செயற்றிட்ட முன்மொழிவுகள் சுபீட்சமான பணிக்கான (சுனிசி மெஹெவர) நிகழ்ச்சித்திட்டம்
   இந்த நிகழ்ச்சித்திட்டம் 2017 நவம்பர் மற்றம் டிசம்பர் மாதங்களில் நடாத்தப்பட்டன.
3. SIYB பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சி
   திணைக்களத்தின் அலுவலர்களது வான்மைத்துவ விருத்திக்காக இந்தப் பயிற்சிநெறி நடாத்தப்பட்டது.
4. கொரிய அரசின் தலையீட்டுடன் வேலையிலீடுபடுத்துதல் மற்றும் தொழில்வாய்ப்பு நிகழ்ச்சிகள் பற்றிய கொள்கை ஆலோசனை நிகழ்ச்சித்திட்டம்.
5. தொழில் செயலாற்றுகை மேம்படுத்தல் / பயிற்சிக்காக அனுப்புதல் என்பதன்கீழ் 15,100 நபர்களுக்கு சேவைகள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் தொழில் வழிகாட்டல் வழங்குவதுடன் தொடர்புடையதாக 39,370 பேர் நாடளாவிய ரீதியில் தொழில் வழிகாட்டல் சேவைகளைப் பெற்றுள்ளனர்.
6. அவதானத்திற்குட்பட்டவர்களுக்காக நாடளாவிய ரீதியில் தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சிகள் 2020 நடாத்தப்பட்டுள்ளன.
7. தொழில் நாடுவோரை விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டம் ILO fund under EU-SDDP Project

| மாவட்டம் | நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | பங்குபற்றிய தொழில் நாடுவோரின் எண்ணிக்கை | செலவு |
|---|---|---|---|
| மட்டக்களப்பு | 12 | 645 | 117,960 |
| யாழ்ப்பாணம் | 12 | 690 | 119,976 |
| கிளிநொச்சி | 2 | 94 | 19,971 |
| மன்னார் | 2 | 106 | 17,780 |
| வவுனியா | 2 | 100 | 20,000 |
| திருகோணமலை | 8 | 381 | 73,690 |
| முல்லைத்தீவு | 1 | 51 | 8,995 |
| அம்பாறை | 11 | 542 | 117,000 |
| மொத்தம் | 50 | 2609 | 495,372 |

**<u>திணைக்களத்தினால் அமுல்படுத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகளின்போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள்</u>**

**மலர் பயிரிடல் பற்றிய முயற்சியான்மை விசேட பயிற்சிநெறி**
**2017/11/18, 2017/11/19, 2017/11/20, 2017/11/21, 2017/11/22**








**பதுளை மாவட்டத்தில் பாதணி உற்பத்தி நிகழ்ச்சித்திட்டம்**








பட்டாதாரிகளுக்காகன நிகழ்ச்சி - 2017.07.25/2017.07.26/2017.07.27

கொழும்பு பல்கலைக்கழகம்




பெற்றோரை விழிப்பூட்டும் நிகழ்ச்சி - 2017.02.13

மலியதேவ ஆண்கள் வித்தியாலயம்




பட்டதாரிகளுக்கான நிகழ்ச்சித்திட்டம் 2017.12.07/2017.12.08

சப்பரகமுவ பல்கலைக்கழகம்

## මිනිස්බල හා රැකීරක්ෂා දෙපාර්තමේන්තුව
## மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்
## Department of Manpower & Employment

2010.02.12 දිනැති අංක 1640/31 දරණ අතිවිශේෂ ගැසට් පත්‍රයේ විධිවිධාන අනුව මිනිස්බල හා රැකීරක්ෂා දෙපාර්තමේන්තුව 2010 වසරේදී කම්කරු සබඳතා හා මිනිස්බල අමාත්‍යාංශය යටතේ ස්ථාපනය කරන ලදි. වර්තමානයේ කම්කරු හා වෘත්තීය සමිති සබඳතා අමාත්‍යාංශය යටතේ ක්‍රියාත්මක වන දෙපාර්තමේන්තුව වෙත රාජ්‍ය රැකියා සේවාවන් පවත්වාගෙන යාම හා ජාතික මානව සම්පත් හා රැකියා ප්‍රතිපත්තියේ විධිවිධාන ක්‍රියාත්මක කිරීමේ වගකීම ද පැවරී ඇත.

2010 பெப்ரவரி 12 ஆம் திகதி 1640/31 ஆம் இலக்க அதி விசேட வர்தமானி அறிக்கை மூலம் மனித வலு மற்றும் வேலை வாய்ப்புத் திணைக்களம் 2010 ஆம் ஆண்டில் தொழில் தொடர்வுகள் மற்றும் மனிதவலு அமைச்சின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டது. தற்போது தொழிலாளர் மற்றும் தொழில் சங்கம் உறவுகள் அமைச்சின் கீழ் இயங்குகின்ற திணைக்களத்திடம் அரச தொழில் சேவைகள் நடாத்திப் போகுதல் மற்றும் தேசிய மனித வளங்கள் மற்றும் தொழில்கொள்கைகளின் ஏற்பாடுகள் செயற்படுத்தும் பொறுப்பும் வழுங்கப்பட்டுள்ளது.

Department of Manpower and Employment was established with effected from 1st January 2010 under the Ministry of Labour Relations and Manpower, in terms of the special Gazette Extraordinary no 1640/30 on 12th February 2010 and conveyed the responsibilities to implement the provisions of National human resource & job policies and conducting State job servicers to the Department which is operating under the Ministry of Labour and Union affairs in present.


**Department of Manpower & Employment,**
9th Floor, Sethsirirpaya (Second Phase),
Battaramulla.